www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi11T

15-09-2023

தென்காசி மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) கலைகளின் உச்சம் எது?

அ) நாடகம் ஆ) கவிதை இ) உரைநடை ஈ) இசை

2) சொற்கள் எங்கே இருந்து எழுகின்றன?

அ) தலையிலிருந்து ஆ) மார்பிலிருந்து

இ) தொண்டையிலிருந்து ஈ) மூக்கிலிருந்து

3) பாயிரம் இல்லது .............. அன்றே.

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

4) மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

5) **கூற்று** : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

**விளக்கம்** : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரன், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.

இ) கூற்று தவறு, விளக்கம் சரி. ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு.

6) ஒப்புரவு என்பதன் பொருள் ..............

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது

இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

7) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை

இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

8) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

9) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய்முன்நேர் ஆ) காய்முன்நிரை இ) கனிமுன்நிரை ஈ) மாமுன்நேர்

10) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து .............. நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

11) மண்ணுக்கு வளம் சேர்ப்பன ..............

அ) ஊடுபயிர் ஆ) இயற்கை உரங்கள்

இ) மண்புழு ஈ) இவை மூன்றும்

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12) ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் .............. என்பதாகும்.

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

13) 'புல்லின் இதழ்கள்' என்ற நூலை எழுதியவர்

அ) பாப்லோ நெருடா ஆ) மல்லார்மே

இ) ஆற்றூர் ரவிவர்மா ஈ) வால்ட் விட்மன்

14) உலகச் சிட்டுக்குருவிகள் நாள்

அ) ஜனவரி 1 ஆ) பிப்ரவரி 15 இ) மார்ச் 20 ஈ) ஏப்ரல் 1

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக:** **3×2=6**

15) இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

17) எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

18) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×2=4**

19) தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

20) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21) 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **7×2=14**

22) பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) அலர்ந்து

ஆ) ஈன்ற

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) செங்கயல்

ஆ) திருப்புகழ்

25) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**

கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

26) **பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ் கலைச்சொற்களை எழுதுக:**

அ) Book Review

ஆ) Value Added Product

27) **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

(கம்பு, மதி, இதழ், ஆழி, மை)

அ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம்.

ஆ) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே.

28) **பின்வரும் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:**

அ) வித்தியாசம் ஆ) விசா

29) **பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

உலை, உளை, உழை

30) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

கால்நடை (அல்லது) அறிவில்லாதவன்

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2×4=8

31) சு. வில்வரத்தினம் "பாடத்தான் வேண்டும்" என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்கள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

33) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

34) மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக: 2×4=8

35) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36) "மலை - மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

37) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை?

38) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக: 3×4=12

39) சொற்பொருள் பின்வரும் நிலையை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

(அல்லது)

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
    பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
    மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
    காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
    பேதமை யற்றிடும் காணீர்.

- **பாரதியார்**

41) பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக.

42) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றியமைக்க:**

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

ஆ) கால்த்துக்கேத்த மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.

இ) தேர்வெழுத வேகமாப் போங்க. நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

ஈ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

43) **தமிழாக்கம் தருக:**

அ) The pen is mightier than the sword.

ஆ) A picture is worth a thousand words.

இ) Work while you work and play while you play.

ஈ) Knowledge rules the world.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



43) காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கலநிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர். ''அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்'' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பனவற்றைத் தாண்டிப் ''பல்கலைப்புலமை'' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ''தமிழ்கெழுகூடல்'' என்றவிடத்திலும் ''கலைப்புலமை'' என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் ''தமிழ்தழீஇய சாயலவர்'' என்னும் இடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன. தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன ''தமிழ் இவை பத்துமே'', ''மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்'' என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் ''தமிழ்மாலை'' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**வினாக்கள்:**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருட்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக: **3×6=18**

44) அ) ''அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்'' - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) ''மதீனா நகரம் ஒரு வளமான நகரம்'' என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

45) அ) ''இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வியல் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன'' - இக்கூற்றினை மெய்ப்பிக்கவும்.

**(அல்லது)**

ஆ) பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

திருக்குமார். மு,
பரிமளம் மெட்ரிக் மே.நி.ப,
வல்லம் - 627809,

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**

47) அ) உண்டால் அம்ம இவ்வுலகம் ............ எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) 'நன்று' என முடியும் குறளை எழுதுக.

தென்காசி மாவட்டம்.

----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com